




ஓலை 165| ஓசை 288| மார்ச் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

## பொருள்

ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்கத் தேவைப்படுவது ஒருவனுடைய மன உறுதிதான். மற்ற வசதிகள் எல்லாம் அதற்குப் பிறகுதான் வருகின்றன


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்!

பாவகை: இன்னிசைக் கலி வெண்பா




கொட்டிடாத் தேளில் கொடுக்கிருந்தும் வீண்தானே;
கொட்டுவதே தேளின் தெளிந்தவற மாகுமே;
கொத்தாத நாகம் கொடும்நஞ்சு பல்லிருந்தும்
காத்தறம் காக்க கடிப்பதுவே ஆகுமன்றோ;
கார்முகில் ஆழில் கனிந்துநீர ருந்துமந்த
கார்முகில் நீரமுதம் கானலானால் நல்லறமோ?
ஏருழுது நீர்பாய்ச் செருவுமிட்டுக் காத்தபோதும்
சீருடனே நெல்மணியாம் செல்வத்தை ஈயா
தெனிலோ அறம்வாழ இவ்வுலகில் ஆகும்?
தனிமாந்தர் நல்லறத்தைத் தாங்கிடாமல் விட்டாலோ
பாரினிலே மாந்தநேயம் பாங்காய் உயிரினமும்
சீரினிலே வாழ்ந்து சிறப்போங்கி வாழும்?
மழைப்பொழிய வேண்டும்;இம் மாநிலமும் ஓங்கி
தழைத்திடவே வேண்டும்; தடம்மாறிப் போனால்
அறம்செழிக்க, நோயின்றி ஆற்றலுடன் வாழ
நிறம்மாறா நல்மனம் நீள்வாழ்வு வேண்டும்;
மழைக்காய் மரவறத்தால் மாரிப் பொழிந்தால்
தழைக்குமறம் தாங்கும் தரை.




**இலக்கணக் குறிப்பு:**

வெண்பா வகைகளில் மேலேயுள்ள இன்னிசைக் கலி வெண்பாவும் ஒன்று, தனிச்சீரின்றி வரும். வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வேண்டளை இணைந்தும் வரலாம். செப்பலோசை இருத்தல் வேண்டும். சீருக்குச் சீர் காய் முன் நேர், நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்று தளை பிறழாமல் வரும். இரண்டடிக்கு ஒரெதுகைப் பெற்று வரும். பதின்மூன்று அடிகள் முதல் பலவடிகள் வரும். அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். ஈற்றடி மூன்று சீர்கள் மட்டும் பெற்று, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் ஏதோ ஒன்றைப் பெற்று, கு, சு, டு, து, பு, று என்னும் உகர ஓசையில் முடியும் சீருக்குச் சீர் குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# முடிவுறா யுத்தம்

பாவகை : கலிவிருத்தம் ; (காய் + காய் + விளம் + மா)

1. அடுபோரால் இழக்கின்ற அமைதியைத் தேடல்
தடுப்போரைப் பகையாக்கித் தகர்த்திட எண்ணல்
அடுத்தாரை ஒருங்கிணைக்க அனைவரும் வேண்டல்
மடுத்தோரை மாற்றிட்டால் மகிதலம் வாழும்.

2. அன்பொன்றை விதைத்திட்டால் அறமதே மன்னும்
தன்னலத்தை விடுத்திட்டால் தபுத்தலும் நீங்கும்.
மன்பதையைக் காத்திட்டால் மகிழலாம் நாமும்
வன்கண்ணை விட்டாலே வடுவுமே மங்கும்.

3. முடிவுறாத சண்டையாலே மூர்க்கமும் சூழும்.
விடியாத இரவுகளால் வித்தகம் குன்றும்.
கடிதலையை நிறுத்தினாலே கடுவினை ஏகும்.
வடித்திடுமே இன்னலுமே வளமதும் பொங்க



கவிஞர் செ. கலைவாணி

# விபரீதம்

என் கழுத்தை
இறுகப் பற்றியிருக்கிறாய்.
உனக்கு
என்னுயிரைப் பறிக்கும்
நோக்கமில்லை என்பது
எனக்குத் தெரியும்.
இது விளையாட்டுதான்.
இருந்தாலும்
இந்த விளையாட்டு
வினையில் முடிந்தது விடுமோ!
எனும் கவலைதான்
என்னை வாட்டி வதைக்கிறது.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

மகத்தான ஓர் பிறப்பு நீர்!
கலியுகத்திலும் நீர் ஓர் கண்ணகியே!
உளி(பேனா) கொண்டு சிலை (கவி) வடிப்பது
ஆடவர்கள் தங்களாலே?!
கார்மேகத்திற்கு ஒப்பிடுவதும் உம்மையே!
திறமைகள் பல பெற்று
தன(குண)த்தால் உயர்வுகள் பல பெற்று - நீர்
வாழ்வாங்கு வாழ
எத்திசையிலும் வாழும் ஆடவர் சார்பாக
வாழ்த்துக்கள் - பல பெற்றிடவே
வாழ்த்தும் உள்ளம்



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# முகமறியாக்காதல்

முகமறியா மௌனம் மனதில் மலர்கிறது,
முகமறியா நினைவு நெஞ்சில் நிறைகிறது.
காணாத கணங்கள் கனவாய் கசிகிறது,
காணாத காட்சிகள் கவிதையாய் விழுகிறது.
தெரியாத தென்றல் தென்பாகத் தொட்டாலும்,
தெரியாத தோழமை இதயத்தில் தங்குகிறது.
பெயரறியா பாசம் புன்னகையில் பிறக்கிறது,
பேசாத பேச்சுகள் உள்ளத்தில் ஒலிக்கிறது.
முகமறியா மனிதர் மனதினுள் வாழ்கிறார்,
முகமறியா நினைவுகள் நாளெல்லாம் நிழல்கிறது.
காணாத காதல் காற்றாய் கலக்கிறது,
காணாத கைகள் கனவுகளைத் தழுவுகிறது.
தெரியாத தூரம் நெருக்கமாய் மாறுகிறது,
தெரியாத தோற்றம் நினைவாக நிற்கிறது.
முகமறியா முகங்கள் மனதில் பதிகிறது,
முகமறியாகாதல் வாழ்க்கையில் கவிதையாகிறது.



கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு

# தாரமாய் சிறப்பித்திடு தரமான காதலியே



குங்குமச் சிவப்பழகி
குறையில்லா சிலையழகி
வர்ணமான ஓவியமே
வாஞ்சையான காவியமே

வாலிபத்தின் வசந்தமே
வஞ்சியுனது சுகந்தமே
பூவின் மென்மையே
பூவையின் தன்மையே

பரவசம் தோன்றுதே
பழரச இதழ்களாலே
ஆனந்தக் கங்கையே
அழகான நங்கையே

காதலுற்றேன் உன்னிடம்
கனிவானப் பார்வையாலே
உன்னிடமே தஞ்சமானேன்
உள்ளமது மஞ்சமாகிடவே

சஞ்சலமது இல்லை
சகியைக் கண்டதுமே
கைத்தலம் பற்றுவேன்
காரிகையுன் சம்மதத்துடனே

தாரமாகச் சிறப்பித்திடு
தரமான காதலியே
இணைந்தே பயணிப்போம்
இறுதிவரை நாம்தானே

இல்லறத்தின் நாயகியே
இனிமையான இனியவளே
நல்லறமது நலமாகும்
நர்த்தகியே உன்னாலே

இன்பத்தின் இலக்கணமே
இலக்கியத் தென்றலானவளே
இளமையது மெருகேறும்
ஏக்கமது தீர்ந்திடுமே.

கவிஞர் ஒப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்


# இளமைப்பருவம்



விடியலோ சூரியஉதயம்
கவலையற்ற உறக்கம்
கள்ளம்கபளமற்ற மனம்
சத்தான உணவு
தரமான கல்வி
தூய்மையான காற்று
இனிமையான பாடல்
அமைதியான சுற்றுசூழல்
சுகாதாரமான வாழ்க்கை
ஒளிமயமான எதிர்காலம்
வயது முதிர்ந்தது
காலம் மாறின
எண்ணம் சொல் எல்லாம் மாறுப்பட்டன
முதுமை பருவத்தை காட்டிலும்
பன்மடங்கு இளமை பருவமே அழகானது.

கவிஞர் மா. மோனிஷா

தீரா உறக்கத்தில் கோமான்
தறிகெட்டு திரியும் காடையர்
இன்னல் சூழ கையறு குடி.
விடியலில்லா பொழுதுகள்
வேனில் தின்ற புழுக்கள்
தழும்புகள் சுமக்கும் மதில்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# தனிமை

தனிமை எனும்
சிறகில் சிந்தனைகள்
பிறக்கும்!

என்னை செதுக்க
என்னை விட
சிறந்த சிற்பி யார்?

இருக்க முடியும் என
எண்ண தோன்றும்
இருளின் ஒளியில்

இரவின் அமைதி என்
நிழல் என்னுடன்
ஒன்றாக அல்ல

மூன்றாக
அது என்ன?

நான்
என் சிந்தனை
என் நிழல்
மூன்றும் சேர்ந்து
தன்னடக்கத்தையும்
தைரியத்தையும்

தந்த தனிமை
என்னை நான் தேடிய
பயணத்தில் தோள்

கொடுத்தது தனிமை
வெறுமை அல்ல வெற்றிப்
பயணத்தில் நான்

பயணிக்க தொடங்கினேன்
பல பேரை தலை
நிமிர தன் பயணத்தை

தொடர ஊன்றுகோலாய்
மாறினேன் தொடர்கிறது

மாற்றத்தை நோக்கி
புதிய பயணம் என்றும்
மகிழ்ச்சியில்.



கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், செங்கல்பட்டு மாவட்டம்



மலை நெஞ்சம் பிளந்து பாயும்
மொழியில்லா பாடலிது!
கடவுளின் கை விரல்களில்
கவிழ்ந்து ஓடும் கண்ணாடிச் சிதறலிது!
கண்காணா உச்சியில் உச்சரிக்கப்படும்
உயிரின் மொழிபெயர்ப்பு இது!
உதிர்ந்து விழுந்தாலும் உயர்வை மறக்காத
உன்னத வைரக் குவியலிது!
சிறு சிறு சிரிப்புகளாய்
சிதறும் நீர்த்துளிகள் இயற்கையின்
சித்தத்தால் வீழ்வதும் வெற்றிதான்,
செய்வதியாது வழிதவறி ஓடுவதும்
சிறந்த வாழ்வினோர் அழகுதான்
என்றுரைக்கும் மாய வெள்ளமிது!
இயற்கைத் தூரிகையால் எழுதியபோதே
என்றும் அழியாத கவிதையானதிது!

கவிஞர் ஜமுனா ஜெகன்

# தனியே பேசும் மொழிகள்



மழைக்காலத்தில் தெருக்கள்
சற்று காலியாகத்தான் தெரிந்தன
சாலை தூய்மை செய்யப்படுகிறதோ!

கதவைத் தட்டித் தட்டிக் கூப்பாடு
போடும் காற்றை
விரட்டவே முடியவில்லை
இரைச்சலும் ஒரு கவிதைபோல் சத்தமாய்!

செருப்பணியாத பள்ளிக் குழந்தைகள்
நனைந்து தலையில்
விழும் நீரைத் தட்டித் தலுக்குவதிலும்
ஒரு கவிதை தோன்றியது.

மழைக்கொரு மழையாகவே
ஈரத்தின் வாசனைக்குப்
போட்டியாகப் பக்கத்து வீட்டு
விறகடுப்பின் வாசம்...
எழும்பிய புகையெல்லாம்
நுழைய இடம் தேடுது.

இந்தத் தனிமை கணமானதுதான்
கதகதப்புத் தேடும் மனது
சந்திப்பை நினைக்கிறது.

நவீன யுகத்தில்
இயற்கையை அடக்க வழியேதும்
உண்டோ?

ஆங்கார ஆட்டத்தில் உருளும்
சத்தங்கள் வியப்புதான்
அசைக்கவும் முடியாது.

விடுமுறை வாசிப்பில்
சூரியன் உறங்கிவிட்டது
எங்கே மறைந்தன என்னைச்
சுற்றிய பறவைகளின் சத்தம்?
பருவநிலை பருவமடைந்ததில்
பக்குவமாய் மறைந்துவிட்டன.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# போர்ச் சூழல்



# நாட்டின் முன்னேற்றம்
நலிவடையும்;
வீட்டின் அமைதி
நீறுபூத்த நெருப்பாகும்.

# மரண பீதி ஓலங்கள்
திறனற்ற ஜாலங்கள்;
முறைகெட்ட வாழ்வின்
வலி மறக்க முடியாது.

# இரண்டாம் உலகப்போர்
மொழிபெயர்ப்புப் புரியா
நிலை; குண்டு வீச்சு
அழிந்தது ஏராளமாய்.

# இதிகாசப் போர்கள்
குருசேத்திரப் போர்,
இராம ராவணப் போர்;
அழிவுகள் அன்றும்!

# மன்னர்களுக்குள்
போர்ச்சூழல் நாட்டில்...
அலெக்சாண்டரும்
அசோகரும் பலரும்.

# போதிமரப் புத்தனும்
பொதுமறைகளும்
போதிப்பது அமைதி,
கருணை, அறம்.

# அன்பினால் உலகை
ஆளுதல் வேண்டும்;
விஞ்ஞான அறிவு
போருக்கானதல்ல.

# போரின்றி வாழ
ஆயிரம் வாய்ப்புகள்...
வாழ்வது நம் கையில்!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# அறியாமை தொலைத்திடு




ஆலயத்தில் ஏற்றும்
விளக்கின் வெளிச்சத்தில்

வாழ்க்கையின் துன்பங்கள்
கருகும் என்பதும்

எலுமிச்சைப் பழத்தின்
ஆயுளை வாகனத்தின்

அடியில் தொலைத்தால்
நல்லதே நடக்கும்

என்ற நம்பிக்கையும்
அறியாமையின் நோய்களாய்!



உழைக்காத வாழ்க்கையின்
எதிர்காலத்தைச் சாலையோரக்


கூண்டுக் கிளியிடம்
மண்டியிட்டுக் கேட்பதும்

ஜாதகத்தின் கட்டங்களில்
நாளைகளைத் தேடுவதும்

அறியாமையின்
அசிங்கங்களாய்!

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தேயாத வானம்



பெரும் போராட்டங்கள் அத்தனையும் தின்று தீர்த்தபின்
புதிய கொழுமுனையில் கூர் தீட்டிக்கொள்ளச் செய்யும்
உன் புன்னகையைப் புறந்தள்ள முடியாமல்
சட்டெனச் சாய்கிறது மனம்
உன்னை நோக்கி.

இதுவரை அணுக்கமாய்க் கூட
அதிர்வு காட்டிச் செல்லாத
வானவில்லின் நிறங்கள் அத்தனையும்
ஒருங்கே வசமான வாசம் முகிழ்கிறது.

தெருமுனை தாண்டாத
தேர் திரும்பி
வாசல் நுழைவதால்
வசந்தத்தின் பெருக்கு
இடம் வலம் தேடிச் சடுதியாய்
வேர் பிடிக்கிறது என்னுள்.

நீ கட்டவிழ்த்து விட்ட
புன்னகையின் முகவரி தேடி
ககனத்தின் மீதே காததூரம் பயணித்தவனுக்கு
இப்பொழுது காதருகே ஒலிக்கிறது
உன் காற்சிலம்பு!

நகரும் மாயத்தில்
நதி தடம் தேடுகிறது!

புலரும் மோகத்தில்
பூபாளம் கேட்கிறது!

எது நான்?
எது நீயெனப் புரியாத
தேயாத வானத்தில்
தேவதையோடு நானிருப்பதால்
தேய்கிறது இருள்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# மரம் தேடும் பறவை



அந்தப் ஒற்றைப் பறவை..
செல்லரித்து சல்லடையாக்கப்பட்டு
வேரறுந்து போன
நேச மரத்தை விட்டு தொலைதூரம் பறக்கிறது.
அன்பின் கிளையில் இளப்பாற இடம் தேடுகிறது.

அந்த ஒரு சிறிய இதயக்கூட்டிற்குள்
ஒளிந்துக்கிடக்கின்றன
ஓராயிரம் கனவுகள்
அத்தனையும் ஒவ்வொன்றாய் கலைகின்றன
நேசம் மறந்து போன நெஞ்சங்களின் நியாயிப்பில்

வார்த்தைகளில் மட்டுமே வாழ்ந்து
மடிந்து போன பல வாக்குறுதிகள்
பிரியமான பிடித்தங்கள் எல்லாம் காலத்தின் பிடியில்
பிடிவாதமாய் பிடுங்கப்பட்டனவே.

சொல்லாத சொற்களுக்கிடையில்
செறிந்துள்ளது மௌனித்துப்போன  பேரமைதி.
அடைமழையின் பின் அசையாது நிற்கும் பெருமரம்போல
கனத்துப்போகிற நெஞ்சமெல்லாம் நெருஞ்சி முள் காடு

தனிமையில்  தவிக்கும் அந்தப் பறவை தேடுவதெல்லாம்
ஒரு சோடி காக்கைகளாவது  குடியிருக்கும் மரத்தைத்தான்
விதி வரைந்த பாதையில் படரும்  நிழலில்
னியும் தொடரும்  பயணம்  மரம் தேடி

கார் மேக பிரசவிப்பில் விரல் தொட்டு
தெறித்த ஓர் மழைத்துளியின் ஈரமாய்

கொஞ்சமே கொஞ்சமாய் அன்பிருந்தால் போதும்
இனி அந்தப் பறவையும்  வாழ்ந்து விடும்.
ஆழ்ந்த பெருமூச்சுடன் ஆசுவாசமாய் இளைப்பாறும்

கவிஞர் பாத்திமா ரஜீபா முபாரக், இலங்கை

# என் உயிரின் கருவறை

அவள் என் முதலில்
பிறந்த நட்சத்திரம்,
கரும்பு போலக்
கருணை மிளிரும் அன்பு;
சிறு கைகளைப் பிடித்தால்
உலகம் முழுவதும் அமைதி,
அவள் சிரிப்பில்
என் சிந்தனைகள் மலர்ச்சி;
துயரம் வந்தாலும்
அவள் கண்ணில் நெகிழ்ச்சி,
வாழ்க்கையின் எல்லா விதிகளையும்
கற்றுத் தரும் குரல்;
அவள் இல்லையேல்
என் உலகம் வெறுமை,
அவள் என் வாழ்வின் கருவறை,
என் உயிரின் உண்மை.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# ஓவியம் தீட்டிய இரவிலே

விடியல் சேராத இரவிலே,
நீயும் நானும் அருகருகிலே.

நிலவொளி பரவும் இருளிலே,
விழி இமை தொட்டே.
இதயம் காதல் கதை எழுத,
இதழ் இரண்டும் வாசிக்குதே.


வாசிப்பில் வசிக்கும் பிழையும்
சரியாகி தோன்ற,
அந்தப் பிழையில் இரு ஜீவனும்
மறு ஜனனம் காணுதே.

விரல் கோர்த்து பேசுகையில்,
ஆயுள் ரேகை தேயுதே.
ஆவலில் தேடலோ,
எல்லை கடந்து நீளுதே.

மெய் விட்டு
உயிர் கூடு பாயும் நேரமே,
இருளைக் கிழித்து
பாயும் ஒளியாய்.

பெண் சிரிப்பில்
ஆயிரம் நிலவு உடைந்து,
உள்ளில் பூகம்பம் நேரிட.

கண் காட்சித் திரையிலே
அவள் முக பிம்பமே நிறைய.
என்னை மறந்து
அவளுள் கரைந்து,
அவள் நாசி சுவாசமாய்
நிறைந்தேன்.



மூச்சில் முனகும் நினைவில்
உடைந்து தனிமை உருக.
காதல் பேசியதே
மௌனமாய் இருளில்.

காதல் ஓவியப் பெண்ணை
வரைந்தேன்.
நானும் ஓவியன் ஆனேன்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# ஆதவன் வருகை



உதித்தான் தினசரி
உறைந்தான் இரவில்.
உதிப்பான் மறுநாள்
விடிந்தான் காலையில்.

விதைத்தவன் உறங்கினான்
விதை உறங்கவில்லை.
வீரத்துடன் எழுந்தான்
விவேகமாய் நடித்தான்.

துதித்தான் இறைவனை
துவைத்தான் மனதை
பழையதை கழித்தான்
புதியதல பெற்றான்.

அனைத்தான் அவளை
அன்பை பரிமாறி.
ஆழ்கடல் மனம்போல்
ஆசையை வளர்த்தான்.

சுவைத்தான் இதழை
சுமந்தான் குழந்தையை.
சுடர்போல் வளர்ந்தான்
சுற்றமும் வளர்த்தான்.

எழுந்தான் வீருடன்
எழுதினான் கவிதையை
எதிர்காலம் தொடுத்தான்
எதிர்த்தான் பகைவனை.

அமர்ந்தான் ஆட்சியில்
அமைதியில் திளைத்தான்
அழகை ரசித்தான்
அதிசயம் படைத்தான்.

வடித்தான் சிலையை
வரைந்தான் ஓவியம்
வளர்த்நான் மரத்தினை
வதைத்தான் எதிரியை.

ஒளியாய் உதித்தான்
ஒளிந்தான் இரவில்
ஒழித்தான் பனியை
ஒசையில் மலர்ந்தான்.

கவிஞர் முனைவர். ரவி சீனுவாசன் (ஏ) பகலவன்

# அன்னை

பத்து மாதம் பரிதவித்து சுமந்து
நித்தம் தூங்காமல் நிம்மதியாய் காத்திட்ட
சுத்தமான தங்கமாய் சுதந்திரம் தந்தவளே
வித்தைகள் அனைத்தையும் விருந்தாய் கொடுத்தவளே

மருந்தே விருந்தாய் மணித்துளியில் உண்டு
விரும்பாமல் அருந்தி வீரமாய் காத்தவரே
சுகமும் மறந்த சுற்றமும் இழந்த
இகத்தில் கிடைத்த இன்னுயிர் கனியே



நாதமாய் உம்மை நாளும் தொழுதும்
பாதமும் பணிந்திடும் பாசறையின் நேசமே
கல்விச் செல்வத்தைக் கணக்கின்றி அளித்த
செல்வமாம் சுகத்தின் சுதந்திர வெற்றியே

தவங்கள் புரிந்து தரணியில் உயர்ந்திட
கவனமாய் காத்திட்ட காருண்ய கருணையே
உள்ளத்தால் உம்மையே உண்மையாய் நெகிழ்ந்தே
வெள்ளத்தின் வேகமாய் வெளிச்சமாகத் தொழுவேனே

துன்ப வேளையில் தூங்காமல் அருகே
இன்பம் மறந்த இன்னுயிர் முதன்மையே
வளங்களை எமக்காய் வறுமையிலும் சேர்த்த
களங்கம் காத்த கருத்தான இதயமே

தேவைகள் அறிந்து தேருதல் காத்த
சேவையின் முதலான செழிப்பான விதையே
வருங்கால உறவுகளை வசந்தமாய் அருகில்
பெருமையில் நிறைத்த பெரும்புகழ் நட்பே

கவிஞர் பி. அன்பழகன். கடலூர்

# நிழல் தேடும் இரவுகள்!

நீண்டு கொண்டே போகும் இரவுகள்
நினைவுகளின் பாரங்களைத்
தாங்கும் சுமைதாங்கிகள்
ஏக்கப் பெருமூச்சுக்கள் ஏகமாய் தவிப்புகள்
உலை மூச்சின் உச்சங்களின்
எழில்களை சிதைத்திடும்
ஏகாதிபத்தியங்கள் எரிந்திடுமோ?
இலவு காத்திடுமோ!?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# விவாகரத்து எதனால்?



உறவு நின்ற வீடு
உள்ளம் நின்ற காலம்
பகல் கொணர்ந்த சினம்
பாடு தரும் இரவில்

சொற்கள் கல்லாய் விழும்
சுவாசம் தீயாய் வரும்
அன்பின் நுண் நூலே
அரைமுறித் துடிக்கும்.

நேற்று மலர் போல
நெய்த சிரிப்பின்கள்
இன்று நிழல் போல
நீளக் காய்கின்றன.

கண் சொன்ன வேதனை
காதுகள் கேளாததால்
உள்ளம் சொன்ன மௌனம்
உறுதிமொழி உடையும்.

அருகே நிற்கின்றோரும்
அந்நியர் போல் மாற
அருகாமை இல்லாதோர்
அன்பின் குரல் கவிக்கும்.

பிழை எவன் என்று
பெருமை கேள்வி செய்தால்
போரும் கரைந்து செல்லும்
போர்வையில் காயங்கள்.

நம்பிக்கை நெகிழ்ந்தால்
நெஞ்சின் நிலம் வறண்டு
அன்பின் ஆறு தண்ணீர்
ஆறெங்கும் ஒழுகாது.

உறவு தாங்கும் வீட்டில்
ஒற்றுமை காய்ந்தாலே
வாழ்வை நெறித்திடும்
விவாகரத்து என்ற சொல்லே.

கவிஞர் திருமதி சினேஹா வினய்

இறைவனும் வணங்கிடும்
உயிரொன்றைப் படைத்தான்
இறைவனும் அன்னையென்ற
உறவைப் பெற்றான்
மறைக்கு மறையான
புனிதம் கொடுத்தான்
முறைமையோடு அவற்றை
பெண்மையென உரைத்தான்

பெண்மைக்குள் பெருமைமிகு
பிள்ளைப்பேறு வரமளித்தான்
தாய்மை என்னும்
தகைமைசால் உயர்வளித்தான்
வாய்மை இதுவென்றே
வகைமைப் படுத்தினான்
பொய்மை இல்லா
பாசத்தைக் கொடுத்தான்



மங்கையர் திருவிழாவை
மாண்போடு அமைத்தான்
மங்கா பேரொளியாய்
மகாசக்தியென போற்றினான்
தங்க மங்கையவர்களை
தரணியிலே சிகரமாக்கிய
எங்கும் நிறைந்த
இறைவனவனைப் போற்றுவோம்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# நட்பு போற்றும் நற்குணம்

கோடை கால மழைத் தூறலாய் - இங்கு
கூடிடும் உயிர்கள் மகிழ்ந்திடவே,
மானிடம் வளர்க்கும் மணம் வேண்டும் - என்றும்
நட்பு போற்றும் குணம் வேண்டும்!

தன்னைப் போலவே பிறரையும் எண்ணும்
தகைமை நம்மிடம் சேர்ந்திட்டால்,
கண்ணில் தெரியும் பார்வையெல்லாம் - என்றும்
கருணை ஒளியில் மிளிர்ந்திடுமே!

உள்ளம் நிறைந்த செயல்களினால் - இங்கு
உண்மை நேர்மை காத்திட்டால்,
உயர்ந்த சிந்தனை ஊற்றெடுத்து - நம்
நெஞ்சில் நிலைத்தே நின்றிடுமே!

எளியவன் வலியவன் எனும் பிரிவினை - அது
எதிர்ப்பை வளர்க்கும் நச்சுச் செடி!
மனிதம் போற்றும் மாண்பு ஒன்றே - நம்மை
உயர்த்திப் பிடிக்கும் வெற்றிப் படி!

இரக்கமே தெய்வீகக் குணமெனக் கொண்டு
இனிமை மாறாது வாழ்ந்திட்டால்,
அகிலம் போற்றும் உன்னத வாழ்வு - நம்
அருகில் தானாய் வந்திடுமே!

பணமும் காசும் கானல் நீராய்
பறந்து போகும் ஒருநாளில்.
கருணை கொண்ட உள்ளமே - அந்த
தெய்வம் வாழும் இல்லமே!



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# வளர்ச்சியின் நிழல்



இலக்கைத் துரத்தித் தேசம் ஓட - இங்கு
இழுத்துப் போர்த்திக் கிடக்குது ஏழை வாடை!

ஒருபுறம் உயருது பேரிலக்குக் கனவு
மறுபுறம் குறையுது சாமானியன் உணவு!

வானளாவிய பாலங்கள் இங்கே - ஆனால்
வறுமை தாண்டா கால்கள் அங்கே!

மின்னணு மையில் தேசம் மின்ன - எம்
ஏழையின் வயிறு பசியில் கிள்ள!

கல்மலைக் காடுகள் வானைத் தொட - எம்
கழனி நிலங்களோ கண்ணீரில் நனைய!

கடனில் ஆடும் மாநிலத் தொட்டில் - இன்னும்
காலத்தின் கைகளில் விதியின் சீட்டில்!

கவிஞர் காவ்யா, நாகர்கோவில்

நாவிற்கினிய நகையே
உவர்க்காத நெல்லியே
உவப்பான இன்னமுதே

நித்தம் மொழிந்தும் கரையாது
நீள்வாசம் சுமக்கும் மணமே
சிந்திய சிலசொற்களில்
சிலதை கோர்த்து பாமாலை
சூடிநல் பாதத்தில் தருவித்தேன்

கற்றலின் திகட்டா இலக்கணமே
கேட்டலின் திகட்டா வெண்பாவே
விளித்தும் தெளிவடையா வினாவே
வேண்டலின் தணியாத பக்தியே

வருந்தித் தீரா உளக்கனவே
வளர்பருவ நிகழ்கனவே
ஆழப்பெரும் காலத்தீயே
அமிழா ஞாலத்தீவே!



கவிஞர் ஜெயப்பிரபா

1.
மசூதியில் வாழும் குருவியும்
கோவிலில் வாழும் குருவியும்
தேவாலயத்தில் வாழும் குருவியும்
விடிந்ததும் ஒற்றுமையாய்
இரை தேடக் கிளம்பின - தங்களின்
குஞ்சுகளுக்காக!



2.
உயிரோடு இருக்கும்போது தாயைப்
பட்டினி போட்ட மகன்;
இறந்ததும்
காகத்திற்குச் சோறு வைத்தான்,
அம்மா வருவாள் என்று!

3.
மணியடித்துக் கும்பிட்ட
குழந்தையின்
காதில் கடவுள் சொன்னது:
"நீயும் நானும்
ஒன்றுதான்" என்று!

4.
மழையிலும்
வெயிலிலும் காவல் காத்த
அய்யனாருக்கு யாரும்
ஊதியம் தரவில்லை - அவர்
கையில் அரிவாள்
இருந்தும்!

5.
வீட்டின் பெயரோ
'அன்பு இல்லம்';
அம்மா இருப்பதோ
'முதியோர் இல்லம்'!

6.
வாசலை விட்டு
நகரவேயில்லை நாய்...
வீட்டின் உரிமையாளர்
வேறொருவருக்கு வீட்டை
விற்ற பின்னும்!


கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி

துணி
உலர்த்தும்
ரிப்பன் கொடியில்
இன்னும் சாயம்
போகாமல்
ஒட்டிக் கொண்டிருக்கிறது
என்
இரட்டை ஜடை
பள்ளிப் பருவம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# இயற்கையின் கொந்தளிப்பில்



பச்சையத்தின் மேனிக்குள்ளே
பருவங்கள் மாறிவர
பால் நிலா தடம் மாறாது
பகலவனும் மினுமினுப்பில்
கூட்டும் அனலுக்குள்
மிச்சத்தின் எச்சமெலாம்
மனிதனுக்கென மாறிவிட்டே
துச்சமென இயற்கையினை
துய்த்துவிட்ட வேளையிலே
பொறுமையென்றே நில்லாமல்
பூமிதனில் விரிந்திடும்
கீறல்கள் நீண்டு நீண்டு
பொங்கிடும் தாக்குதலில்
புதைவதென்னவோ
மனிதன் மட்டுமே.
உயிர்வாழும் உணர்வில் நாடாது
சேமிப்பும் சேகரிப்பும் தனக்கேயென்ற
சுயநலத்தின் பேயாட்டம்
சுரண்டியவை கொஞ்சமல்ல.
வளியின் ஓட்டத்தோடு
வாழ்வை உறிஞ்சியவனுக்கு
வாகனமும் கருவிகளும்
வானளவில் பெருக்கியபின்
ஆலைகளும் ஆசைகளும்
அளவற்ற பேராசைக்குள்
அகத்தை மறைத்திட காற்றும் நஞ்சாக
காலடி மண்ணும் நஞ்சாக
புசித்திடும் உணவும் சக்கையென்றாகிட
பொழுதும் புறமும் கலங்கிடவே
பற்றி எரியும் பசுமைக்குள்
பாலைவனங்கள் பெருகிவர
புற்றெனப் புறமும் நோயாகி
முற்றும் மாறி முடங்கிவிட
நிலையற்ற வாழ்வில்
நிலைத்திடுமென சேகரிப்பில்
நிறைப்பதெல்லாம்
நிறைப்பதெல்லாம்
சாம்பலாகிப்போகுமென்ற
சரித்திரத்தை உணராமல்
தன்னைத்தானே உயர்த்திடவே
எச்சிலை விழுங்கும் இனமென்றே
மாறிப்போன மானிடா.
சூழலைக் காத்திடல்
பிரசவத்தின் அவசரமென்றே
சூளுரைத்தே காலடி வைத்திடுக.
மனதைச் சூழ்ந்த பேராசை
கலைத்தால்தானே மாற்றங்கள்.
ஏற்காமல் உறங்கிப்போனால்
இயற்கை பாடம் சொல்லவரின்
ஏற்பதன் துன்பம்
எரிமலையென்றும்
நடுக்கத்தின் மீறலுக்குள்
மேகவெடிப்பும் வறட்சியும்
மீறிய வெள்ளமுமென
நீண்டிடுமே நிம்மதியற்றே.

கவிஞர் இளையவன் சிவா

# கடந்து போகிறேன்

இதயத்தை உடைத்தவர்கள்
இங்கு பலருண்டு
உதயத்தை காணாதவர்கள்
இங்கு பலருண்டு
இவர்களை
கடந்து போகிறேன்

இரக்கம் கொள்வதாய்
நடிப்பவர்கள் பலருண்டு
உறக்கத்தை காணாதவர்கள்
இங்கு பலருண்டு
இவர்களை
கடந்து போகிறேன்

கடந்து போவது
என்னைக் காப்பாற்றிக்
கொள்ளும் சுயநலமே
என்னைக் காப்பாற்ற
முடியாமல் போனால்
பின்பு
எப்படி சமுதாயத்தை
காப்பாற்ற முற்படுவேன்
என் வயிறும்
சட்டைப்பையும் நிறைந்தால்தான்
மற்றவர்களுக்கு செய்ய முடியும்

இதை போய்
தவறு என்றும்
அநியாயக்காரன் என்றும்
வசைமாறி பொழிந்தால்
நான் பொறுப்பாக முடியாது
சொல்லி முடித்தான்
அரசியல்வியாதி



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

மரணம் வாழ்க்கையில் உறுதி
இங்கு நாம் இல்லாமலும்
இந்த உலகம் பயன்படும்
ஆதலால் வாழ்ந்து விடு
உனக்கான வாழ்க்கையை எப்பொழுதும்
உன் இலக்கை எட்டும் வரை



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)

# ஓய்வுக்கான ஓட்டம்!



நித்திரையும் நினைவுகளும்
சொப்பனங்களின் திறவுகோல்கள்!
இறைவனோடி இசைந்திருக்க
இரவுகள் இனிமையே!

நினைவுகளின் காயங்கள்
நிகழ்கால சிந்தனைகள்!
காத்திருக்கும் குறிக்கோள்கள்
கவலைகளின் கூடாரங்கள்!

பகலாக்கும் இரவுகளை
நித்திரையும் சொப்பனமாகும்!
அலைமோதும் கடலில்
பாய்மர கப்பலாய்

பொருள் தேடும்
கடல் கடந்த பயணத்தின்
பணி முடித்து வாழ்வின்
கரை தீண்டும்
நாள் எப்பொழுது!


உவகையாய் மனம் ஓய்வுறும்
நாள் எப்பொழுது!
விரைவாய் பயணிக்க முடியவில்லையே
உலகம் தடுக்கிறது சூழ்நிலைகளால்!

மனமும் தவிக்கிறது இப்பயணத்தில்
இறைவனின் நாட்குறிப்பில் இவ்வுயிரின்
ஓய்வு நாள் எப்பொழுது!

காலம் நாடி காத்திருக்கும் உயிர்
காலம் கனியும் ஓர் நாளில்!
அந்நாளில் மனம் இலயித்திருக்கும்
உறவுகளோடு
எனும் நம்பிக்கையில்!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# நிறமும் மனமும்



வெள்ளை என்றால் தூய்மை
கறுப்பு என்றால் துயரம்
கண்கள் ஒளி வழங்க
கறுப்பும் இல்லை வெள்ளையும் இல்லை!

வாழ்வில் இன்பம் துன்பம் உண்டு
வாழ்வது நீயும் நானும் கண்டு
உடைந்து நொறுக்கப்பட்டு
உருவாக்கப்படுகிறோமே
உலையிலே அன்று!

நல்லது கெட்டது அறிய
நாளும் வழங்கிடும் சந்தர்ப்பம்
சந்தர்ப்பம் சத்திய சோதனையில் விழுந்து
சான்று பெற்று சாதிக்கும் வாழ்க்கை!

தளரா மனமும் சாட்சி கொடுத்திட
சலிப்பும் வந்து தடை தாண்ட
சரி சொல்லி சிரிக்கும்
கரி பூசி கறுப்பாக்கப்பட்ட வாழ்வு
நிறங்கள் அல்ல
மனம் ஒன்றே தீர்மானம் செய்யும் வாழ்வு!

கவிஞர் திருமதி ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# ஐயமில்லை

வானமும் அருகில்தான்
மேகமும் அருகில்தான்

நட்சத்திரங்களும் அருகில்தான்
பூமியும் அருகில்தான்


ஐம்பூதங்களும் அருகில்தான்
ஐயமில்லை எனக்கு
உன்னுடன் இருக்கையிலே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# கைபேசி

அல்வா செய்வதெப்படி?
அடுப்பங்கரைக்கே
அழைத்து வரும்!
நாட்டு நடப்பு நடு முற்றத்திற்கே
நடந்து வரும்!
விழியசைவில் பார்த்ததெல்லாம்
விரலைசைவில் கை சேரும்!
எண்ணியதை எண்ணியவாறே
எட்டிப் பிடித்துவிட
கைக்குள் அடக்கமாகும்!
முகம் காணாமல் பழக,
முகம் அறிந்தோர் விலக
சுற்றமும் நட்பும்
சுழற்றி வித்தை காட்ட!
கயிற்றில் ஆடும் பம்பரமாய்
மனம் அலையும்!
அலைபேசியின் வெளிச்சம்
இருட்டறையில் முடக்கும்!
மீண்டு வர எண்ணிடவே
முடியாமல் மூழ்கிப் போகும்!
அனைத்தையும் தெரிவித்த
அலைபேசி தட்சிணையாய்
கேட்கிறதே உந்தன் ஆயுளை!
வீட்டைத் துறந்து உன்னை மறந்து
உயிர் குடிக்கிறதே
அந்தக் கைபேசி!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

# விதை!

வித்தை விதை! விளைந்தெழும் பயிர்கள்!
சத்தான மண்ணிருந்தால் அத்தனையும் பயிராகும்!
வித்தையல்ல! புதைந்த விதைகள் நிலச்சிறையை
சிதைத்து முளைத்தெழுதல் இயற்கையின் விந்தை!
விதைக்கும் கரங்கள் விதிசெய்யும்! உலகு
துதிக்கும் வாழ்வை தொடர்ந்திட வகைசெய்யும்!
கதிநீயே என நிலமகளைச் சரணடைந்து
மதியின் துணைகொண்டு மண்ணில் பயிர்செய்தால்
வதைக்கும் பசிப்பிணியை விரட்டிடலாம் எளிதாக!
ஆடிப் பட்டத்தில் தேடி விதைத்தால்
கூடிவரும் நல்விளைச்சல்! கொண்டாடத் தைபிறக்கும்!
நாடிவரும் உறவுகளும்! பாடிவரும் பறவையினம்!
கோதிலா குணங்களொடு குழந்தைகளை வளர்த்தாலே
மாசிலா மனத்துடன் அடுத்தடுத்த தலைமுறைகள்
நாட்டை உயவர்விக்கும் நற்பயிராய் விளைந்திடுமே!
நல்லதொரு கருவமைந்தால் நற்க(வி)தை உருவாகும்!
நல்லதையே விதைப்போம்! நற்பயனை அனுபவிப்போம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# உறக்கம்




கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# அந்தச் சிலரில்

பெரிய மேடைகளில்
பேச்சாளர் பெயர் பெயராய்ச் சொல்லி,
"இன்னும் சிலர் விடுபட்டிருந்தால்
மன்னிக்கவும்" என்கையில்...

குழுவாய்ச் செய்த பணிக்குப்
பாராட்டு கிடைக்கையில்,
காரணமாய் நிறைய
நபர்களைச் சொல்லிவிட்டு,
"இன்னும் சிலர் உள்ளனர்"
என்கையில்...

படைப்புப் போட்டிக்கான
முடிவு அறிவிப்பில்,
தன் பெயர் இல்லாதபோதும்,
"இன்னும் சிலரின் படைப்புகள் அருமை;
போட்டி விதிகளின்படி
தேர்வு செய்யவில்லை"
என்கையில்...

அந்தச் சிலரில் நாமும் உண்டா?
என மனதுக்குள்ளே
ஏக்கக் கேள்விகள்!

அப்படியெல்லாம்...

கொடுத்த உழைப்புக்கு
வெற்றி பரிசாகையில் -
"இப்படியே தொடரனும்!"

முயற்சித்தும்
கிடைத்த தோல்விக்கு -
"இதோடு முடியணும்!"



திட்டமிடாத
அவசர அவசியப்
பணிகள் வருகையில் -
"அடிக்கடித் தொந்தரவு
செய்யக் கூடாது!"

கஷ்டம் என நினைத்தது
கைகூடுகையில் -
"எல்லாமே இப்படி
இருந்தால் எவ்வளவு
நன்றாய் இருக்கும்!"

முற்றிலும்
எதிர்பாராக்
கஷ்டங்கள்
வருகையில் -
"இதுவே வாழ்வில்
வருகின்ற கடைசியாய்
இருக்கட்டும்!"

என எண்ணுவது
மனித மனங்கள்...
நடைமுறையில்
சாத்தியமில்லை என்ற
யதார்த்தம் உணர்ந்தபோதும்!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# அழகு என்பது

கட்டுரை

அழகு என்பது இந்த உலகத்தைப் பொறுத்த வரை, வெள்ளை அல்லது சிவந்த நிற மேனியுடன் "சிக்"கென்ற உடல் வாகுடன் நிமிர்ந்த பார்வையுடன் உலவுவதே என்பது தான் இங்கு ஒரு வெளிப்படையான அபிப்பிராயமாக உள்ளது.

**உண்மையான அழகு என்ன?**

அழகு எங்கிருந்து வெளிப்படுகிறது. அழகு அழகு என்று அடித்துக் கொள்கிறோமே, அழகின் அடிப்படை என்ன? அழகை எங்கெங்கு காண முடியும் என நாம் சிந்தித்திருப்போமா? நமக்கு பணம் தேடவே நேரம் போதாத வேளையிலே உண்மையான அழகின் தேடல்களுக்கு எங்கே சமயம் கிடைக்கப் போகிறது? உடலை நல்ல முறையில் சிக்கென்று வைத்துக் கொள்ளவும், புற அழகில் நாட்டம் செலுத்தவும் மட்டுமே நாம் ஒரு நாளைக்கு எவ்வளவு பணம், பொருள் நேரம் செலவிடுகிறோம் தெரியுமா?

அதிகாலையில் ஒவ்வொரு முக்கியமான நகரங்களை எடுத்துக் கொண்டால் வெண்ணுடைத் தரித்து (டீசர்ட், வெள்ளை கால்சட்டை, வெள்ளை சாக்ஸ், வெள்ளைகேன்வாஸ்) உடலை நல்ல முறையில் ஒரு வடிவமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக கடற்கரையில் மற்றும் பெரிய சாலைகளில் ஓடுவதற்கும் உடற்பயிற்சி செய்வதற்கும் எத்தனை லட்சம் பேர் முயற்சி செய்வதை கண் கூடாக நம்மால் பார்க்க முடியும்.



முக அழகை மேம்படுத்த எத்தனை ஆயிரம் கம்பெனிகள் காஸ்மெட்டிக்ஸ்க்ரீம், ஆயில் என தயாரித்து தமது விற்பனையை முடுக்கி விடுவதற்கு வித்தியாசமான விளம்பரங்களை டெலிவிசன், தினசரி பேப்பர்கள் மூலம் மக்களை எட்டச் செய்கிறது.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

கட்டுரை

ஒரு நாளைக்கு கோடிக்கணக்கான பணம் செலவழித்து இந்த முக அழகு க்ரீம், ஆயில் உடலுக்கு தேவையான சோப், காலுக்குத் தேவையான விதவிதமான ஆயூர்வேதிக் க்ரீம் என வாங்கும் நாம் நம்மை அழகு படுத்துவதில் நம் புற அழகை வெளிப்படுத்திக் கொள்வதில் எத்தனை மும்முரமாகிப் போகிறோம்.

தினமும் உடற்பயிற்சிசெய்து உடலை பெருக விடாமலும், வடிவமாக வைத்துக் கொள்ளவும் எத்தனையோ வித விதமான உடற்பயிற்சி கருவிகளை வாங்கி உபயோகிக்கிறோம். இதனால் உடற்பயிற்சிக்கென கருவிகள் உருவாகி எத்தனையோ கோடிக் கணக்கில் விற்பனையாகிறது.

இன்றைய உலகில் அழகு என்ற சொல் கூட ஆரோக்கியத்தைத் தாண்டி தான் யோசிப்பதாக இருக்கிறதே தவிர உடல் ஆரோக்கியம் கூட இரண்டாம் பட்சமாக போய் விடுகிறது.

எங்கு நோக்கினும் அழகிப் போட்டிகள், ஆண்அழகன் போட்டிகள், எத்தனையோ கோடிப் பணத்தை எப்படி யெல்லாமோ சீரழிக்கின்ற நமக்கு, நம்மில் எப்போது உண்மையான அழகை உருவாக்கப் போகிறோம் என்று யோசிக்க நேரங்களை எடுத்துக்கொண்டதுண்டா?


அழகு அழகு என நவநாகரீக கலாச்சாரத்தின் உச்சியில் எதை எதை எல்லாமோ தேடிக் கொண்டிருக்கின்ற நாம் நம்மில் எத்தனை பேர் மன சாந்திக்காக அதன் அடிப்படையில் உருவாகும் உண்மையான அழகிற்காக ஏங்கியிருக்கிறோம்? அவசர உலகத்தில் தீப்பிடித்து விட்டதோ என சொல்ல வைக்கும் வேகத்தில் பறந்து கொண்டிருக்கும் நமக்கு இரண்டு சிறகுகள் இருந்திருந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என சிந்திக்கத் தான் முடிகிறதே ஒழிய... இந்த அழகு உபாதையில் அவசர அவசரமாக அழிந்து போக முயற்சி செய்கிறோமே ஒழிய உண்மையான அழகை எப்படி கொண்டு வரப் போகிறோம் என்று சிந்திக்கிறோமா?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

கட்டுரை

அன்னை மொழியே! அழகார்ந்த !
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாசெந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியேட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

-பாவலரேறு



பாவலரேறு பெருஞ்சித்திரனார்(மார்ச் 10, 1933 — சூன் 11, 1995) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியோரின் கொள்கை கற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் பரவப் பெருங்காரணமாக விளங்கியவர். தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன்தமிழகத்தில் முதன்முறையாக வந்த காலத்தில் அவரையும் அவரது தோழர்களையும் அரணாகக் காத்து அவர்களை வளர்தெடுத்தவரும் இவர்தான். 20 முறை சிறை சென்றும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் தமிழீழப் போராட்டம் வரை இவரது செயல்பாடுகள் தமிழர்கள் நடுவில் வியந்து போற்றப்படுகின்றன.

"என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! - வரும்
புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்த(ப்)
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!"

என்று எழுதி அதன்வழி வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**கல்வி:**

பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். "குழந்தை' என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர். பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் "மலர்க்காடு' என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார். மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.

பெருஞ்சித்திரனார் 1950இல்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்றார். பாவாணர் அங்குப் பணிபுரிந்தபொழுது அவர்தம் மாணவராக தமிழறிவு பெற்றார். இளமையில் பெருஞ்சித்திரனாருக்கு உலக ஊழியனார், காமாட்சி குமாரசாமி முதலானவர்களும் ஆசிரியர்பெருமக்களாக விளங்கினர்.

கல்லூரியில் பெருஞ்சித்திரனார் பயிலும் காலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கினார். எனவே தாம் இயற்றிய மல்லிகை, பூக்காரி என்னும் இரு பாவியங்களையும் எடுத்துக்கொண்டு பாவேந்தரைச் சந்திக்க புதுச்சேரி சென்றார். ஆனால் பாவேந்தர் அந்நூல்களைப் பார்க்க அக்காலத்தில் மறுத்துவிட்டதையும் பின்னர் ஒரு நூலைக் கொய்யாக்கனி எனும் பெயரில் அவரே அவர் தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தந்ததையும் பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவதுண்டு.

பெருஞ்சித்திரனார் கல்லூரியில் பயிலும் போது கமலம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அப் பெண்ணே தாமரை அம்மையாராக இன்று மதிக்கப்படுபவர்.

**தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:**

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் முதன்முதலில் பணியில் இணைந்தார். ஐந்து ஆண்டுகள் புதுவையில் வாழ்க்கை அமைந்தது.

அக்காலத்தில் பாவேந்தருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1959 இல் பெருஞ்சித்திரனாருக்குப் பணிமாற்றல் கிடைத்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இச்சூழலில் பாவாணர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்அகரமுதலித் துறையில் பணியேற்றார். பாவாணர் விருப்பப்படி தென்மொழி என்னும் இதழை1959இல் பெருஞ்சித்திரனார் தொடங்கி நடத்தினார். அரசுப் பணியில் இருந்ததால் தன் இயற்பெயரான துரை-மாணிக்கம் என்பதை விடுத்து பெருஞ்சித்திரன் என்னும் புனைப்பெயரில் எழுதினார்.

தென்மொழியின் தொடக்க ஏட்டில் சிறப்பாசிரியர் பாவாணர் எனவும் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் எனவும் பெயர்கள் தாங்கி இதழ் வெளியானது. தென்மொழியின் 16 இதழ்கள் வெளிவந்த சூழலில் பொருள் முட்டுப்பாட்டால் இதழ் இடையில் நின்றது. பின்பு கருத்துச் செறிவுடனும் புதுப்பொலிவுடனும் மீண்டும் வந்து கல்லூரி மாணவர்கள் தமிழாசிரியர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது.

இவர் எழுதிய பாடல்கள் இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக அரசால் குற்றம் சாற்றப்பெற்றது. இவருக்கு இதனால் சிறைத் தண்டனை கிடைத்தது.வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது ஐயை என்னும் தனித்தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார்.

**தமிழ்த்தேசிய விடுதலைப் போராளி:**

"விடுதலை வேண்டும் முதல் வேலை
எந்த வேலையும் செய்யலாம் நாளை"... -மேற்படி பாடலில் பெருஞ்சித்திரனார் வேண்டிப் பாடிய விடுதலை என்பது தமிழ்நாடு விடுதலையைக் குறிப்பதாகும். 1956ஆம் ஆண்டு மொழிவழித் தமிழகம் அமைந்த பிறகும் தனிக் கழகம் கண்ட அண்ணா திராவிடநாடு கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. இந்நிலையில் 1959ஆம் ஆண்டு தமிழ்மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், தமிழ்நாடு விடுதலை ஆகிய மூன்று கொள்கையை முன் வைத்து தென்மொழி இதழை பெருஞ்சித்திரனார்

## மறைமலையடிகள் வழியில் பெருஞ்சித்திரனார் :

தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வழியில் தேவநேயப் பாவாணர் தென்மொழி இதழில் சிறப்பாசிரியராகச் செயல்பட்டார். 1963ஆம் ஆண்டு பிரிவினை தடைச் சட்டம் வந்த போது அண்ணா பயங்கொண்டு திராவிட நாடு கோரிக்கைக்கு முழுக்கு போட்டார். இவரோ ஆட்சியாளருக்கு அடங்கிட மறுத்தார். தனது தென்மொழி ஏட்டிலே, "இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வை விடப் பன்னூறாயிரம் மடங்கு உயர்ந்து வலிந்தாகும் தமிழக விடுதலையுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சீறும் புயலை மீன் வலை கொண்டும் மடக்கும் செயல்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

## பெரியாரும் பெருஞ்சித்திரனாரும்:

ஈ.வெ.ரா.பெரியாரை ஆரிய எதிர்ப்பின் அடையாளமாக போற்றி வந்தவர் பெருஞ்சித்திரனார். 1965ஆம் ஆண்டு மொழிப்போரின் போது பெரியார் மீது கடும் சினம் கொண்டார். காமராசர் அவர்கள் நல்லவர் என்று கூறி, பேராயக்கட்சிக்கு சார்பாக பேசியதோடு, தி.மு.க. இந்தியை எதிர்க்கிறது என்பதற்காக இந்தியைப் படிப்பதில் தவறில்லை என்று பெரியார் பேசியதைக் கண்டித்து "பெரியார் செய்த பெரும்பிழை" என்று தென்மொழியில் எழுதினார். பெரியாரின் தமிழ் மொழி எதிர்ப்பை கடுமையாகச் சாடி "பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி" என்று தலைப்பிட்டு அதே தென்மொழியில் விரிவான கட்டுரை தீட்டினார். அதில், "மொழித்துறையில் இவர் வெறும் இராமசாமி தான்" என்று சாடினார். பெரியாரோ தன்னை திருத்திக் கொள்ள வில்லை. மீண்டும் மீண்டும் "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி" என்று பெரியார் எழுதிய போது வெகுண்டெழுந்து 'தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழியே' என்று 16 பக்கம் பெரியாரை கடிந்து எழுதவும் துணிந்தார்

## கருணாநிதியும் பெருஞ்சித்திரநாரும்:

தமிழின இரண்டகர் கருணாநிதி தென்மொழி ஏட்டை தடை செய்த போது பெருஞ்சித்திரனார் தமிழ்சிட்டு ஏட்டை தொடங்கி கொள்கை முழக்கம்

செய்தார்.

1976இல் ஆரியப்பித்து கொண்ட பெண் இந்திரா காந்தியால் மிசா சட்டத்தில் ஓராண்டு தளைப்படுத்தப்பட்டார். 1983ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போர் தீவிரமடைந்த போது அதற்குத் துணை நின்றார். 1991 இல் இராசீவ் காந்தியை கொன்ற வீரத்தமிழ்பெண் தணுவை பாராட்டி "ஆகுமோ உலகு அவள் அழிவிலாப் புகழ்க்கே" எனும் பாடலை தென்மொழியில் எழுதினார்.

## இறுதி போராட்டம்:

1994இல் 'திராவிடர்' என்று சொல்வது தவறு என்றும், 'தமிழர்' என்றே குறிப்பிட வேண்டுமென்றும் தனது 'தமிழ் நிலம்' ஏட்டில் அறிக்கை விடுத்தார். தாழ்த்தப்பட்டோரை 'பழந்தமிழர்' என்றே குறிப்பிட வேண்டும். ஆதிதிராவிடர் என்றோ, ஹரிஜன் என்றோ, தலித் என்றோ அழைக்கக் கூடாது என்பதையும் தெளிவாகக் கூறி விளக்கமளித்தார்.

கடும் காய்ச்சல் கண்டு துன்ப நிலையில் இருந்த போதும் 24.4.95இல் நடந்த தமிழே பயிற்றுமொழி, ஆட்சிமொழி என்று கூறி தலைநகர் தமிழ்க்கழகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு குடும்பத்தோடு தளைப்படுத்தப்பட்டார். அதுவே பெருஞ்சித்திரனார் இறுதியாகப் பங்கேற்றப் போராட்டமாகும்.

## மறைவு:

இவரது படைப்புகள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது. சளித்தொல்லை மிகுந்து, சிறுநீரகம் செயலிழப்புக்குள்ளான நிலையில் 11.6.1995 இல் இத்தமிழ்ப் பேருலகத்தை கண்ணீர் கடலில் மிதக்க விட்டு மறைந்தார்.

நாளை

# நமதே

## பெரிதாக யோசி

## சிறிதாக தொடங்கு

## ஒரே நாளில்

## உயர்ந்து விட முடியாது

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com